இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 02-04-2025

ஆதித்யநாத் பேசலாமா?

தமிழ்நாடு முதலமைச்சர் மொழியால் பிரிவினைவாதம் செய்கிறாராம் சொல்கிறார் உ.பி. முதலமைச்சர் ஆதித்யநாத். வாயைத் திறந்தால் மக்களைப் பிரிவினைப்படுத்தும் சொல்லையே பேசி, செயல் செய்தால் பிரிவினைச் செயல்களையே செய்யும் ஆதித்யநாத், 'பிரிவினை' பற்றி எல்லாம் பேசலாமா? அதற்கான தகுதி அவருக்கு இருக்கிறதா?

அவர் முதலமைச்சர் ஆவதற்கு முன்னால் அவர் மீது வைக்கப்பட்ட 'கலவரத்தை தூண்டினார்' என்ற குற்றச்சாட்டை வைத்து, அவருக்கு அதுவரை தரப்பட்டு இருந்த இசட் பிரிவு பாதுகாப்பு ரத்து செய்யப்பட்டது. அத்தகையவர் தான் இன்று இந்தியாவுக்கு அறிவுரை சொல்லும் இடத்துக்கு வந்திருக்கிறார். அவர் மீது எத்தனை விதமான வழக்குகள் இருக்கிறது என்பதை அவரே சொல்லட்டும். அல்லது, 'என் மீது எந்த. வழக்கும் இல்லை' என்று சொல்லும் தைரியம் அவருக்கு உண்டா?

'அவர்கள் ஒரு இந்துவை எடுத்துக் கொண்டால், நாங்கள் நூறு முஸ்லீமை எடுத்துக் கொள்வோம்' என்று பேசிய சைவ பட்சி இவர். மதச் சிறுபான்மையினரை அச்சுறுத்துவதன் மூலமாக ஒட்டுமொத்த மக்கள் அனைவர் மனதிலும் பீதியைக் கிளப்பியவர் அவர்தான்.

"நூறு இந்துக் குடும்பங்களுக்கு மத்தியில் ஒரு முஸ்லிம் குடும்பம் பாதுகாப்பாக உணரும். ஆனால் 100 முஸ்லிம் குடும்பங்களுக்கு மத்தியில் 50 இந்து குடும்பங்கள் பாதுகாப்பாக இருக்காது" என்று சமீபத்தில் பேட்டி அளித்தவர் தான் இவர். எந்தத் தரப்பாக இருந்தாலும் அந்தத் தரப்புக்கு பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது முதலமைச்சரான அவர்தானே!

பேச்சுச் சுதந்திரத்தை பிறப்புரிமையாகக் கொள்ளக் கூடாது என்று சொல்லி இருப்பவரும் அவர்தான். அதே பேச்சுச் சுதந்திரத்தை வைத்து கடந்த காலங்களில் அவர் பேசிய பேச்சுகள் அனைத்தும் குற்ற வழக்குகளுக்கு தகுதி உடையவை அல்லவா?

தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்க அவர்கள் மீது வழக்குகள் போட்டு, அவர்களது வீடுகளை இடிப்பதையே சட்டபூர்வமாகச் செய்து வந்தார் ஆதித்யநாத். இதே பாணியை பா.ஜ.க. ஆளும் மத்தியப் பிரதேசமும், குஜராத்தும், அரியானாவும் பின்பற்றியது. இந்தியாவில் புதிய பாணியை புகுத்தியவர் அவர்.

அவர் ஆட்சி நடத்தும் லட்சணம்தான் இந்தியாவே பார்த்துச் சிரித்ததே. 'எங்கள் மாநிலத்தில் கொரோனாவில் யாருமே இறக்கவில்லை' என்று சொன்னவர் ஆச்சே அவர்? 'இதற்கு என்ன ஆதாரம்?' என்று கேட்டால், 'கொரோனா பற்றிய எந்தக் கணக்கெடுப்பையும் எடுக்க வேண்டாம்' என்று சொல்லி விட்டவர் அவர்.

உத்தரப்பிரதேச மாநில இளைஞர் நாடாளுமன்ற விழாவில் உரையாற்றிய ஆதித்யநாத், "ஜனநாயகத்தின் மூன்று தூண்களான சட்டப்பேரவை, நிர்வாகம், நீதித்துறை ஆகிய மூன்றும் ஒன்றிணைந்து செயல்படும் போது தான் நல்லாட்சி நிகழ்கிறது. மூவரும் இணைந்து செயல்படும் போது தான் அது நல்லாட்சியின் இலக்கை அடைய உதவுகிறது. நாட்டின் ஒட்டுமொத்த அமைப்பும் இந்த மூன்று தூண்களால் இயக்கப்படுகிறது" என்று குறிப்பிட்டார். உடனே அதற்காக பின்னூட்டம் இட்ட, அந்த மாநில மக்கள், 'நீங்கள் நடத்துவது நல்லாட்சியா?' என்று கேட்டிருக்கிறார்கள்.

'இந்தியாவிலேயே அதிகளவிலான குற்ற வழக்குகள் பதிவாகும் மாநிலம் உ.பி.தான். 2022 ஆம் ஆண்டில் இந்தியா முழுக்க பதிவான 35 லட்சம் குற்ற வழக்குகளில் 4 லட்சம் வழக்குகள் உத்திரப் பிரதேசத்தில் பதிவானவை. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 65,743" என்று சமூக வலைதளங்களில் பதிவிட்டு, ஆதித்யநாத் நடத்தும் ஆட்சியின் லட்சணத்தை அவரது மாநிலத்தைச் சார்ந்தவர்களே அம்பலப்படுத்தி வருகிறார்கள்.

கும்பமேளாவின் போது ஒரு படகோட்டி ரூ.30 கோடி சம்பாதித்ததாக உ.பி. சட்டமன்றத்தில் ஆதித்யநாத் சொன்னார். அவர் சொன்ன படகோட்டி மீது பல்வேறு குற்ற வழக்குகள் இருக்கிறது. மஹ்ரா என்ற படகோட்டி மீது கொலை, கொலை முயற்சி, கலவரம், துன்புறுத்தல், மிரட்டி பணம் பறித்தல் ஆகிய வழக்குகள் இருப்பதாக உ.பி. காங்கிரஸ் தலைவர் சுப்ரியா ஷ்ரினேட் பேட்டி அளித்துள்ளார்.

பா.ஜ.க.வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அவரது ஆட்சியின் மீது குறை சொல்லி வருகிறார்கள். அவரது அமைச்சரவையில் அமைச்சராக இருக்கும் ஆஷிஷ் படேல், லோனி சட்டமன்ற உறுப்பினர் நந்த் கிஷோர், பதேஹி சட்டமன்ற உறுப்பினர் தீனாநாத் பாஸ்கர், லக்கிம்பூர் கேரியின் சட்டமன்ற உறுப்பினர் .. என்று பலரும் உ.பி. ஆட்சியை விமர்சித்து வருகிறார்கள்.

"தொழில்நுட்பக் கல்வித் துறையில் ஊழல் நடக்கிறது. இது தொடர்பாக எந்த விசாரணை வைத்தாலும் அதில் நான் வந்து சொல்லத் தயாராக இருக்கிறேன்" என்று அமைச்சர் ஆஷிஷ் படேல், பி.பி.சி. செய்தி நிறுவனத்துக்கு பேட்டி அளித்துள்ளார். "காவல் நிலையங்கள் ஊழல் நடக்கும் கூடங்களாக மாறிவிட்டன" என்று பா.ஜ.க. எம்.எல்.ஏ.வான நந்த் கிஷோர் சொல்லி இருக்கிறார். 'லஞ்சம் கொடுக்கவில்லை என்பதற்காக ஒருவரை குண்டர் சட்டத்தில் கைது செய்துள்ளார்கள்' என்று பா.ஜ.க. எம்.எல்.ஏ. தீனாநாத் பாஸ்கர் பேட்டி அளித்துள்ளார். பணம் கேட்டவர் எந்த அதிகாரி என்பதையும் இவர் சொல்லி இருக்கிறார். இதை வைத்து பி.பி.சி. நிறுவனம் பல்வேறு பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்களிடம் பேட்டி எடுத்துள்ளது. மூன்று பா.ஜ.க. உறுப்பினர்கள் இதனை உறுதி செய்துள்ளதாக அந்த நிருபர் எழுதி இருக்கிறார்.

கோடிக்கணக்கான மக்கள் கூடிய விழா என்று சொல்லப்படும் கும்பமேளாவில், எத்தனை பேர் உயிரிழந்தார்கள் என்ற கணக்கே இல்லை. இதுதான் ஆதித்யநாத் ஆட்சி.

உத்தரப்பிரதேசத்தில் போலே பாபா என்ற சாமியார் சொற்பொழிவை கேட்க வந்தவர்கள் கூட்ட நெரிசலில் சிக்கினார்கள்.. 121 பேர் மரணம் அடைந்தார்கள். அப்போது எந்த பாதுகாப்பு ஏற்பாடும் செய்யாதவர்தான் ஆதித்யநாத். ஒப்புக்கு ஆறு பேரை கைது செய்துவிட்டு, போலே பாபாவை விட்டுவிட்டதுதான் பா.ஜ.க. அரசு. போலே பாபா மீது பல்வேறு வழக்குகள் இருக்கிறது. பா.ஜ.க. ஆட்சி எப்படி கொடூரமாக இருக்கும் என்பதற்கு உதாரணம் உ.பி. ஆதித்யநாத் அரசு ஆகும்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மொத்தமுள்ள 80 இடங்களில் 33 இடங்களை மட்டுமே வென்றவர் ஆதித்யநாத். அந்த மாநிலத்து மக்களிடம் எத்தகைய வெறுப்பை அவர் வாங்கி வைத்துள்ளார் என்பது இதில் இருந்து தெரிகிறது. எனவே தமிழ்நாடு முதலமைச்சருக்கு அவர் அறிவுரை சொல்ல வரத் தேவையில்லை.

●●

தமிழ் மீதெல்லாம் நிர்மலா சீத்தாராமனுக்கு பற்றில்லை!

பதற்றமான சூழலில் இந்தியாவை வைத்திருக்க வேண்டும் என்பதுதான் பா.ஜ.க.வின் நோக்கம்!

அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் குற்றச்சாட்டு!

அரியலூர், ஏப். 2 - இந்தியாவை எப்போதும் பதட்டமான சூழலில் வைத்திருக்க வேண்டும் என்பதுதான் பா.ஜ.க.வின் ஒரே நோக்கமாக உள்ளது என்று போக்குவரத்துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு தமிழ் மீதும் பற்றில்லை. தமிழ்நாடு மீதும் பற்றில்லை. தமிழர்கள் மீதும் மதிப்பில்லை என்று எஸ்.எஸ்.சிவசங்கர் கூறியுள்ளார்.

அரியலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

தொகுதி மறுசீரமைப்பு தமிழகத்திற்கு பாதிப்பு ஏற்படும் என்ற நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தப்பட்டு, அதில் பெரும்பான்மையான கட்சிகள் கலந்து கொண்டு ஒருமித்த கருத்தை தெரிவித்துள்ளன. அடுத்த கட்டமாக தமிழக முதல்வர் தலைமையில் ஏழு மாநில முதல்வர்கள் மற்றும் துணை முதல்வர்கள் கலந்து கொண்ட கூட்டத்திலும் தொகுதி மறுசீரமைப்பு தென் மாநிலங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை கருத்தில் கொண்டு, தொடர் முன்னெடுப்புகளை எடுப்பது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தென் மாநிலங்கள் மக்கள் தொகை கட்டுப்படுத்துவது என்ற நடவடிக்கையை எடுத்த பிறகு நம்முடைய தமிழ் நாட்டினுடைய மக்கள் தொகை 12 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டை விட பீகார் உள்ளிட்ட வட மாநிலங்கள் தொடர்ந்து, வளர்ச்சியில் ஈடுபடாமல் மக்கள் தொகை கட்டுப்பாட்டையும் மேற்கொள்ளாமல் 23 சதவீதத்தில் உள்ளனர். தமிழகத்தில் வசூலிக்கப்படுகின்ற ஜி.எஸ்.டி. தொகையில் பெருமளவு அவர்கள் மாநிலத்திற்கு எடுத்துக் கொண்டு செல்கின்றனர்.

பல மாநிலங்களுக்கு மிக அதிக அளவீடாக கொடுக்கின்ற காட்சியை பலமுறை அந்த புள்ளி விவரங்கள் மூலம் எடுத்துக் கூறியும், ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இதற்கு மாற்றான பதிலை தான் கூறி வருகிறார். அவர் நிதி அமைச்சர் ஆக இருப்பதற்கான தகுதி குறைவானவராக நான் கருதுகிறோம். தொகுதி மறுசீரமைப்பு இதுவரை மோடியும், பா.ஜ.க. தலைவர்களும் ஒரு தெளிவான அதிகாரப்பூர்வமான பதிலை வெளியிடவில்லை. தொகுதி மறுசீரமைப்பு குறித்து தெளிவாக விளக்க வேண்டும் இல்லாவிட்டால், தொடர்ந்து நாம் போராட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம் என்று அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்தார்.

மேலும் நமக்கு வர வேண்டிய கல்விக்கான நிதி, 100 நாள் வேலை திட்டத்திற்கான பங்கீடு, ஜி.எஸ்.டி.யில் உரிய பங்கீடு ஆகியவை தமிழ்நாட்டிற்கு வரவேண்டும். எனவே இதை எல்லாம் வலியுறுத்தி தொடர்ந்து தமிழகம் ஒருமித்த குரலில் ஒலிக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

எதையாவது திடீர் என்று அறிவித்து அதன் மூலமாக ஒரு நாடு ஸ்தம்பித்துப் போகின்ற சூழலை உண்டாக்க வேண்டும். பதட்டமான சூழலில் இந்தியாவை வைத்திருக்க வேண்டும் என்பதுதான் பா.ஜ.க.வின் நோக்கமாக இருக்கிறது. ஏற்கனவே மத பிரிவினை வாதத்தின் மூலமாக இந்தியாவை பதட்டமாக வைத்து தங்கள் கையிலே வைத்துக் கொள்ளலாம் என்று முயற்சித்தவர்கள், இன்றைக்கு இந்த மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி சீரமைப்பு என்ற பெயரிலே சில குறிப்பிட்ட மாநிலங்கள் கையில் வைத்துக்கொண்டு மற்ற மாநிலங்களில் மிரட்டலாம் என்ற எண்ணத்தில் பா.ஜ.க. தலைவர்கள் செயல்படுவதாக அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் குற்றம் சாட்டினார்.

தமிழகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் அவரால் பொறியியல் மற்றும் மருத்துவ படிப்புகள் தமிழில் கொண்டுவரப்பட்டுள்ளது. இதைக் கூட அறியாத மத்தியில் பவர்ஃபுல்லாக உள்ள உள்துறை அமைச்சர் அமித்ஷா தமிழில் உயர் கல்வி படிப்புகள் கொண்டு வருவோம் என்று கூறுவது மக்களை தொடர்ந்து ஏமாற்றும் செயலாகவே உள்ளது என்று கூறினார்.

பொய் சொல்வதற்கென்று பிறந்த கட்சி பா.ஜ.க.!

பொய் சொல்வதற்கென்று பிறந்த கட்சி பா.ஜ.க. என்பதற்கு மீண்டும் ஒருமுறை அந்த கட்சியினுடைய முக்கிய தலைவர் அதுவும் இந்தியாவினுடைய உள்துறை அமைச்சராக இருக்கின்ற அமைச்சர் அமித்ஷா பொய் பேசுவது என்பது மிகுந்த வருத்ததிற்குரியது. வன்மையாகக் கண்டிக்கத்தக்கது தமிழ்நாட்டில் ஏற்கனவே முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருக்கின்ற போது பொறியியல் படிப்பதற்கு தமிழ் வழியில் படிக்கலாம் என்பதற்காக கொண்டு வரப்பட்டு அண்ணா பல்கலைக்கழகத்தில் அந்த படிக்கின்ற அந்த வாய்ப்பு இருக்கிறது இப்படித்தான் அவர்கள் வட இந்தியாவில் பேசுவார்கள் எந்த உண்மை செய்தியையும் மாற்றி அவர்கள் ஒரு பொய் செய்தியாக பரப்புவார்கள் அந்த குழப்பம், பொய் பிரச்சாரத்தை தமிழகத்தில் மீண்டும் மீண்டும் செய்யலாம் என்றுதான் அவர்கள் ஒவ்வொரு முறையும் பின்னோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள் தோல்வி அடைந்து கொண்டிருக்கிறார்கள் ஏற்கனவே மதம் ரீதியாக பிரிக்கலாம் பாத்தாங்க தமிழ்நாட்டுல அதுக்கு இடமில்லை முருகனுடைய வேலை தூக்கிக் கொண்டு சுற்றி வந்து பார்த்தார்கள் அதற்கு மக்கள் செவி சாய்க்கவில்லை

இன்றைக்கு புதிதாக ஒரு கதை இந்த கதை ஏற்கனவே மோடி இங்கு வரும் போது தமிழில் திருக்குறல் எல்லாம் சொல்லி தமிழை கொன்று புதைப்பார். பொறியியல் படிப்பதற்கான வாய்ப்பு தமிழகத்தில் ஏற்கவே முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டு வந்திருக்கிறார் மருத்துவக் கல்விக்கான தமிழ் படிப்பும் இருக்கிறது ஆய்வு செய்து பேச வேண்டும் ஒரு ஒன்றியத்தினுடைய மிக மிக சக்தி வாய்ந்த உள்துறை அமைச்சராக இருப்பவர் பொறுப்பற்ற தன்மையில் அண்ணாமலை போன்று பேசுவது என்பது கண்டிக்கத்தக்கது.

நிர்மலா சீத்தாராமன் தமிழகத்திலிருந்து வந்தவர் என்பது பி.ஜே.பி.யினர் நம்மளை ஏமாற்றும் வார்த்தை. அந்த அம்மாவிற்கும் தமிழ் நாட்டிற்கும் துளியும் சம்பந்தம் கிடையாது. தமிழ் உணர்வும் கிடையாது. இல்லனா தமிழ் படித்தால் நீங்கள் என்ன செய்ய முடியும், பிச்சை எடுக்கத்தான் போக வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் ஒரு மத்திய அமைச்சராக இருக்கிறவர் பேசுகிறார் என்றால், எவ்வளவு ஒரு கீழ்த்தரமான சொல் அது. பிரதமருக்கு அடுத்த நிலையிலே நிதி அமைச்சர் என்ற ஒரு பொறுப்பில் மந்திரி சேவையில் இருந்து கொண்டு இந்த வார்த்தைகளை சொல்கிறார். அவருக்கு தமிழ் மீதும் பற்றில்லை. தமிழ்நாட்டு மீதும் பற்றில்லை. தமிழர்கள் மீதும் மதிப்பில்லை என்று போக்குவரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமை! ஞான.இமையநாதன் வரவேற்புரை!

மயிலாடுதுறை - காளியில் முதல்வர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரை! குத்தாலம் பி.கல்யாணம் பங்கேற்பு!

மயிலாடுதுறை, ஏப்.2 - மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் காளி கடைத் தெருவில் கழகத்தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பும்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார்.

மயிலாடுதுறை மத்திய ஒன்றியச் செயலாளர் ஞான. இமையநாதன் வரவேற்றார். ஒன்றிய அவைத்தலைவர் வி.பன்னீர்செல்வம், துணைச் செயலாளர்கள் சுப.சிற்றரசன், சந்திரவைடி வம்ராஜா, பொருளாளர் கோ.மோகன், மாவட்ட பிரதிநிதிகள் கே.எஸ்.கண்ணன், க.கலையரசன், எஸ். செல்வமணி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கே.ஜெயக்குமார், கிளைச் செயலாளர்கள் எஸ். ராஜேந்திரன், டி.சின்னதுரை, எம்.ராமசாமி, கே. மதியழகன், கே.மாதவன், என்.மணி, ஜி.சுந்தரமூர்த்தி, ஒன்றியப் பிரதிநிதிகள் கே. சூரியமூர்த்தி, ஆர்.சாவித்ரி, டி,தனபால், செந்தில்ஸ்டலின், மகாலெட்சுமி, ஆர். ரமேஷ், ஏ.பேபி, ஆர். கார்த்திக்ராஜா, டி.குணசீலன், டி.குமார், ஜி.மகாலிங்கம், எஸ்.சரஸ்வதி, எம். பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் பொதுக் குழு உறுப்பினர் அ.காந்தி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் கோவி.உமாபதி, ஒன்றியக் கழக துணைச் செயலாளர் காவி.கார்த்திகேயன் ஆகியோர் தொடக்க உரையாற்றினார்கள்.

கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கழக உயர் நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கி.சத்தியசீலன், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், ஒன்றியச் செயலாளர்கள் என்.இளையபெருமாள், பி.முருகமணி, மங்கை எம். சங்கர், பஞ்சு.குமார், கு. வைத்தியநாதன், மயிலாடுதுறை நகரச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், பொதுக் குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், நத்தம் ஏ.வின்சென்ட், ஜெ. கபிலன், ஹர்சத், பேரூர்ச் செயலாளர்கள் என்.அண்ணாதுரை, எஸ்.கே.முத்துராஜா, அரசு வழக்கறிஞர் இராம. சேயோன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே.மருது, டி.ராஜ்குமார், இரா.மனோகரன், சாந்தி இராமலிங்கம், பெரு.வீரமணி, வி.எஸ்.பிரபாகர், மணல்மேடு பேரூராட்சி தலைவர் கண்மணி அறிவழகன், மாவட்ட இலக்கிய அணி துணைத்தலைவர் ரஞ்சித் (எ) துணைமாணிக்கம், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் ஏ.கே.எஸ். நாஜீம், ஜி,பி.கார்த்திகேயன், ஜெ.விஜயகுமார், பி.அதியமான், எஸ்.சுரேஷ், உஷா ராணிகுமார், சிவ.அன்பு, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் காளி கிளைக் கழகச் செயலாளர் எம்.ராகவன் நன்றி கூறினார்.

அதைத் தொடாந்து கழகத்தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

சென்னையில் கால்பந்து போட்டி! மகிழ்ச்சியளிக்கிறது!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு

சென்னை, ஏப். 2 - சென்னையில் நடந்த கால்பந்து போட்டி குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:

பிரேசில் லெஜண்ட்ஸ் அணியும் இந்தியா ஆல் ஸ்டார்ஸ் அணியும் மோதிய கால்பந்து போட்டி சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றதைக் காண மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. தமிழ்நாடு பெருமிதத்தோடு நேற்று முன்தினம் இரவு ஆர்ப்பரித்துள்ளது.

ஒரு விளையாட்டுப் போட்டி என்பதைத் தாண்டி, நினைவில் கொள்ளத்தக்க, அடுத்து பல தலைமுறையினரிடம் கனவுகளை ஊக்குவிக்கும் தருணமாக இப்போட்டி அமைந்திருந்தது.

பிள்ளைகளே, நன்கு படியுங்கள், தைரியமாக விளையாடுங்கள், நியாயமான முறையில் வெல்லுங்கள்!

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது பதிவில் கூறியுள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 265 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.1 கோடியே 74 இலட்சத்து 27 ஆயிரத்து 400 மதிப்பிலான இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டரை மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., த.எஸ்.ராஜகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் ஆகியோர் வழங்கினார்கள். உடன் மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், பி.எம் ஸ்ரீதர், சௌமியன், கண்ணகிபன்னீர், குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ஞான.இமயநாதன், மங்கை எம். சங்கர், ஹர்ஷத், காந்தி, பி.சிவதாஸ், ஜெ.கபிலன், நத்தம் ஏ.வின்சென்ட், பிரபாகர், ஆர்.எஸ்.ஸ்ரீதர் மற்றும் பலர் உள்ளனர்.